புத்தகம்-ங. 1907ஆ மார்ச்சுமீ 15உ இலக்கம்-ச.

சுகாதார போதினி.

க-ம் பிரிவு.

வைத்தியக் குறிப்புகள்.

முன்தொடர்ச்சி (Vol-III. பக்கம் 8.)

இருமற் சூரணம்.

மஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம், தான்றிக்காய்த்தோற்-சூரணம், நெல்லிவற்றற் சூரணம், இந்துப்புத்தூள், மாதுளை ஓட்டுச்சூரணம். பூனைக்காலி விதைச் சூரணம், வாசனைப் புல்லைச் சுட்டெரித்த சாம்பல், கண்டங்கத்திரியை யெரித்த சாம்பல, இவை வகை-க-க்குப் பலம்-உ, அரிசித்திப்பிலிச் சூரணம், மிளகுச் சூரணம், இவை வகை-க-க்குப் பலம்-வ.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து வைத்துக்கொள்வதே யாம்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-எ. அ.

அனுபானம்:—சர்க்கரை, தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகை யிருமல்களும் மூன்று நாளைக்குள் குணமாகும்.

வேறு.

மாதுளைத் தோலையிடித்த சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம், கற்கடக சிங்கிச் சூரணம், இவை வகை-க-க்கு விராகனெடை-கஉ, இந்துப்பு, கறுப்புப்பு, கல்லுப்பு இவற்றின் தூள் வகை-க-க்கு விராகனெடை-ங, பஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம் விராகனெடை-சு.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்துக் கல்வத்தில் அரைமணி நேரம் அரைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-ரு. அ.

அனுபானம்:—தேன், சன்னராஷ்டக் கஷாயம், மிளகுக் கஷாயம், முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகை இருமல்களுந் தீரும்.

ஷை (வேறு)

கற்கடக சிங்கிச் சூரணம், மேற்றோல் சீவி யிடித்த அதிமதுரச் சூரணம், கருவேலம் பிசின் சூரணம், கசகசாத்தோற் சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம், கடல் தேங்காய்ச் சூரணம், இவை வகை-க-க்குப் பலம்-உ.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து மிஸ்ரமித்துக் கொள்வதே யாம்.

பிரமாணம்:—விராகனெடை-உ, ஙு.

அனுபானம்,—தேன், சர்க்கரை, ஆகியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகை யிருமல்களும்தீரும்.

இருமல் ஷர்பத்.

மேற்றோல் சீவின அதிமதுரம், சோம்பு, தூத்திவிதை, மயிர்ச்சிக்கி, இவை வகை-க-க்கு விராகனெடை-உ, ஜூபா வெந்தயம் இவை வகை-க-க்கு விராகனெடை-க, சீமை நறுவிலிப்பழம் பலம்-ங, கசகசா பலம்-உ, கசகசாத்தோல் பலம்-கஉ, சீனிச் சர்க்கரை பலம்-ரு.

செய்முறை.—மேற்கண்ட சரக்குகளுள் சிதைக்கவேண்டியவைகளைச் சிதைத்தும் விதைநீக்க வேண்டியவைகளை விதை நீக்கியும் முக்காற்படி ஜலத்தில்-உச-மணிநேரம் ஊறவைத்து அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்து மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கி வடிகட்டின கஷாயத்தில் சர்க்கரையைச் சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்துப் பாகுபதத்திலிறக்கி ஆறினபின் சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-உ, ங.

உபயோகம்:—எல்லாவகை யிருமல்களும் தீரும்.

வேறு.

சரக்கொன்றைப்புளி தேவையான அளவு எடுத்து ஜலத்திற் கரைத்து வடிகட்டித் திப்பிநீக்கி அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்துக் குழம்புப் பதமாகச் சுண்டவைத்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவேண்டும். இப்படிச் செய்ய ஏலாதவர்கள் இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளில் விற்கப்படும் சுத்திசெய்த சரக்கொன்றைப் புளியைவாங்கி உபயோகித்துக்கொள்ளலாம். மேற்கண்ட விதமாகச் சுத்திசெய்த சரக்கொன்றைப்புளி ஒருபங்கு, சீனி இரண்டு அல்லது,மூ

ன்றுபங்கு. இவ்விரண்டையு மிஸ்ரமித்துத் தேக சுபாவத்திற்குத் தருந்தபடி விராகனெடை-க. உ, விதம் பிரதிதினமும் இரண்டு அல்லது, மூன்று தடவை உபயோகித்து வந்தால் மலபத்தத்தை நீக்கி இருமலைப் போக்கும்.

ஷை (வேறு.)

சரக்கொன்றைப் புளிபலம்-ங, (இதனைமூன்றுஆழாக்கு ஜலத்திற்போட்டுக் கரைத்து வடிகட்டித் திப்பியை நீக்கி விட்டு இதில் பத்துப்பலம் சீனிச் சர்க்கரையைச் சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயா லெரித்துகுழம்புப் பதமான பக்குவத்தில் இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும். அவசியமானபோது வேளை யொன்றுக்கு விராகனெடை-ரு,அல்லது-சு-வீதம் சோம்புத் திராவகம், அல்லது சோம்புக்கஷாயத்துடன் சாப்பிட வேண்டும். இவ்விதம் பிரதிதினம் ஒருதடவை அல்லது, இரண்டு தடவைசெய்துவர மலபந்தத்தை நீக்கி மார்பிலுள்ள கபத்தை வெளிப்படுத்தி இருமலைச் சாந்தப்படுத்தும்.

வேறு.

ஆளி விதையை வறுத்திடித்த சூரணம் ஒருபங்கு, தேன் இரண்டுபங்கு. இவ்விரண்டையு மிஸ்ரமித்து வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு இரண்டு அல்லது, மூன்று விராகனெடை வீதம் பிரதிதினமும் ஒன்று அல்லது, இரண்டு தடவை உட்கொண்டு வந்தால் இருமலைச் சாந்தப்படுத்தி அங்கு கப உற்பத்தியாகாமற் றடுக்கும். பக்கநோவு குணப்படும்.

இன்னும் வரும்.

சுகாதார போதினி.

உ - ம் பிரிவு.

குடும்ப வைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vol - III - பக்கம் (18)

கஷ்டத்தோடு சூதகங்காணும் ஸ்திரீகளுக்குப் பின்காணும் முறையைக் கொடுத்துக் குணமானதாக டாக்டர் ஈஷ்வில் என்னும் துரையவர்கள் தம் அனுபவ கிரந்தத்தில் எழுதியிருக்கின்றார்கள். அம்முறையிது:—

சீமை யிந்துப்பு விராகனெடை	கஉ,
காந்தமண் பஸ்பம் விராகனெடை	கஉ.
பைக்கார்போனெட்ஆவ்சோடாவிரா	ச.
கறியுப்பு விராகனெடை	உ.
சுக்குச்சூரணம் விராகனெடை	க.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்துச் சீஷாவில் வைத்துக் கொள்ளவும். படுத்துக் கொள்ளப்போகும்போது தேக சுபாவத்திற்குத் தருந்தபடி ஒன்று அல்லது, இரண்டு விராகனெடை பானஞ்செய்விக்க வேண்டும். மருந்து சாப்பிடுவதற்கு முன் இந்தச் சீஷாவை நன்றாய்க் குலுக்கிக் கொள்ளவேண்டும்.

உபயோகம்:—சூதக காலங்களிலுண்டாகும் வயிற்றுநோய், இடுப்புநோய், மார்புநோய் முதலியவைகள் தீரும். சூதகம் கிரமப்படும்.

ஷை (வேறு.)

குளிர்சுரம், நடுக்குசுரம் ஆகிய இந்தச்சுரங்கள் கண்டு மலபந்தப்பட் டிருந்தால் தேகம் உஷ்ணமாயிருக்கும்போது சீமை யிந்துப்பைக் கீழ்க்காணும் முறையைப்போல செய்துகொடுத்தால் குணமுண்டாகும். அம்முறையிது;—

லைகர் அம்மொனியி அஸிடேடிஸ் விராகனெ-க.	
வெடியுப்புத்தூள் குன்றிமணிஎடை	உ௦.
ஸ்பிரிட்ஆவ் நைட்ரிக் ஈதர் துளி	உ௦.
சீமை யிந்துப்பு விராகனெடை	க.
கர்ப்பூரஜலம் விராகனெடை	க.

செய்முறை:—இவை யெல்லாவற்றையு மிஸ்ரமித்துக் கொள்ளவும். இது ஒருதடவைக்காம் அவுடதம. இவ்விதம் பிரதிதினம் இரண்டு அல்லது, மூன்றுமணிக்கொருதடவை உபயோகிக்க வேண்டும். மலம் போகிறவரையில் அல்லது, வேர்வைகண்டு சுரம் தணிகிறவரையிற் கொடுக்கவேண்டும். பேதி ஆனபிறகு, அல்லது சுரம் நின்றபிறகு இதனை உபயோகிக்கலாகாது.

(இன்னும் வரும்)

சுகாதார போதினி.

ங - ம் பிரிவு.

ஸ்திரீ வைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vol. -III-பக்கம்-11·)

இந்தச் சமையத்திற் கவனத்தில் வைக்கவேண்டியது ஒன்றுண்டு. அதாவது பிள்ளை பிறந்து அதி

ன் வாயிலுள்ள கோழை முதலியவைகளை நீக்கினபின்பு அழாமலிருந்தும் முகம், கண் ஆகியவைகளில் நீலம் பாய்ந்து மிருந்தால் உடனே நாபிக்கொடியைக் கட்டாமல் நாபிக்குச் சமீபதில் கொஞ்சம் அறுத்து விட்டு ஒன்று ஒன்றரை விராகனெடை இரத்தம்வெளிப்பட்டபின் அதைக் கட்டிவிட வேண்டும். இப்படிச் செய்வதால் முகம் முதலிய ஸ்தானங்களிலுள்ள நீல வருணம்போய் பிள்ளை அழ ஆரம்பிக்கும். இப்படிச் செய்தும் அழாவிட்டால் மேற்கண்டபடி முயற்சிசெய்ய வேண்டு மென்பதே.

நமது நாட்டுப்புறத்து மருத்துவ அம்மாமார்கள் இந்தச் சமையத்தில் முகத்தில் தண்ணீரைத் தெளிப்பதற்குப் பதிலாக அதன் தலையைத் தண்ணீரில் நனைக்கின்றார்கள். இதனாற் சில சமையம் கெடுதிக் கேதுவாகும். சில அம்மாமார்களோ மிளகை மென்று கொண்டு பிள்ளையின் வாயில் ஊதுகின்றார்கள். ஊதுவதாற் குணமுண்டா மென்பது வாஸ்தவ மாயினும் மிளகு முதலிய காரவஸ்துக்களாற் குழந்தைக்கு அசௌக்கியத்திற் கேதுவாகும்.

ஆங்கிலேயர்களின் வழமையாவது பிள்ளை பிறந்தவுடன் அது அதிக துர்ப்பலமுள்ளதா யிருந்தால் நாபிக் கொடியை தாய் பக்கத்திலிருந்து உருவிப்பிள்ளையின் தேகத்தில் இரத்தஞ் செல்லும்படியாகச்செய்து அதில் முடிச்சுப் போட்டுத் தடைப்படுத்தி விடுகின்றார்கள். தாயின் இரக்தத்தினாற்றான் பிள்ளை ஜீவித்திருக்கிற தென்பது தெரிந்த விஷயம். ஆகையால் தாய் இரத்தமானது கொஞ்சம் உள்ளே செலுத்தப்பட்டால் அதிக பலமுண்டாகு மென்பதேயாம். ஆங்கிலேய மருத்துவப் பெண்கள் குழந்தை பிறந்தவுடன் அதிக துர்ப்பலப்பட் டிருந்தால் மேற்கண்டபடி தாயின் இரத்தத்தைப் பிள்ளைக்குச் செலுத்துவதுமின்றி அந்தக் கொடியை அறுத்தவுடன் தாய் பக்கத்திலுள்ள கொடியிலிருந்து வடியும் இரத்தத்தில் இரண்டு மூன்று துளிகளைப் பிள்ளைக்குக் குடிப்பாட்டி விடுகின்றார்கள். இவ்விதஞ் செய்வது மேன்மையெனத் தெரிந்தபோதிலும் அந்த இரத்தத்தை அந்தக் குழியின் வழியாக ஏற்றலாகாதெனச் சாஸ்திரங்களிற் சொல்லப்பட் டிருக்கின்றது. இதன் கருத்தாவது தாயின் இரத்தம் கெட்டிருந்தால் பிள்ளைக்குக் கெடுதியுண்டாகா திருக்கவேண்டு மென்பதேயாம். ஆகையால் இந்த விஷயங்களை நன்றாய் நிதானித்துச் செய்யவேண்டியதே பிரதானம்.

குறிப்பு.

நாபிக்கொடியை அறுக்கும்போது அந்த நாபிக்கு சமீபத்தில் முடிச்சிட வேண்டுமென நாம் முன்னே சொல்லி யிருக்கின்றோம். அப்படிச் செய்வதின் கருத்தாவது அறுபட்ட வாயின் மூலமாகப் பிள்ளையினின்றும் இரத்தம் வெளிப்படாம லிருப்பதற்கேயாம். அப்படி யிரத்தம் வெளிப்பட்டால் பிள்ளையுடனே இறந்துபோம். நாபிக்கொடியில் மறுபக்கம் போடும் முடிச்சின் உபயோகமாவது:—

(1) அந்தக் கொடியில் இரத்தந் தங்கிநிற்பதினால் அது கனத்துச் சீக்கிரம் விழுந்துபோக ஏதுவாகும்.

(2) தெய்வாதீனமாக இன்னொரு சிசு வயிற்றிலிருந்து அதற்கும் இதற்கும் ஓரே நஞ்சுக்கொடியா யிருக்கும் பக்ஷத்தில் அது மரண மடையா திருக்கும்படியேயாம்.

குறிப்பு.

இரண்டு பிள்ளைகள் கெற்பத்திலிருந்து ஒன்றிற்குப் பின் மற்றொன்று ஜனனமாகிறது. ஒரு பிள்ளைஜனனமான பின்பு மற்றபிள்ளை ஜனனமாக முதற்பிள்ளைக்குச் செய்த முறையே யிதற்கும் செய்யவேண்டும். முதற்பிள்ளை பிறந்தபின்பு மருத்துவப் பெண்ணானவள் பிள்ளைத் தாய்ச்சியின் வயிற்றில் கையை வைத்துப் பார்த்தால் பிள்ளையிருப்பதும் இல்லாததும் பரிஷ்காரமாய்த் தெரிந்துகொள்வார்கள்.

குறிப்பு.

நாபிக்கொடியை யறுக்கும்போது அதிலுள்ள சத்தைப் பின்னுக்குத் தள்ளித் துளையிடாத நல்லமுத்து பனிரெண்டை யிதற்குட் செலுத்திக் கட்டிவிட வேண்டும். தினம் ஒன்றிற்கு ஒவ்வொரு முத்தாக இந்தப் பிள்ளைக்கு அரைத்துக் குடிப்பாட்டிவிடவேண்டும். இப்படிச் செய்வதால் பிள்ளையின் ஆயுள் முழுவதும் அம்மை வராதெனச் சாஸ்திரங்களிற் சொல்லப்பட் டிருக்கின்றது. இதுவன்றி அம்மை வராமல் தடுக்க அநேக உபாயங்கள் சொல்லப்பட் டிருக்கின்றன. அதையெல்லாம் கவனிக்காமல் நாம் பல தடவைகளில் மோசம் போகின்றோம். ஆனால் ஆங்கிலேய அரசாங்கத்தார் அம்மை வைப்பதே சட்டமாக ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். இதன்படி நடந்து வருவதே போதுமானதா யிருக்கும்.

இன்னும் வரும்.

சுகாதார போதினி.

௪-ம் பிரிவு.

பாலவைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vol. III. பக்கம் - (20.)

போர் மாந்தம்.

இலக்ஷணம்:—சுரமடித்தல், தேகம் கரைந்து கூடாயிருத்தல், அடிக்கடி கழிச்சல், உதடு உலர்ந்து போதல், வாயில் நுரை தள்ளுதல், வாந்தியாதல், கண் குழிவிழுந்திருத்தல், நெஞ்சு புண்ணுயிருத்தல் முதலியவைகளாம்.

சிகிச்சை:—மேற்றோல்சீவின சுக்கு, அரிசித்திப்பிலி, இந்துப்பு, சீரகம், கோரோசனை இவற்றின் சூரணம் வகை-௧-க்கு விராகனெடை-௨, உத்தாமணியிலை, தும்பையிலை, சாணக்கியிலை, பேய்மிரட்டியிலை, பொடுதலையிலை இவை வகை-௧-க்கு விராகனெடை-௩

செய்முறை:—இவை யெல்லாவற்றையுங் கல்வத்திலிட்டு இரண்டுசாமமரைத்து மைபோலானபின் குன்றிமணியெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

பிரமாணம்;—மாத்திரை-௧-௨.

அநுபானம்:—இலவங்கக்கஷாயம், மோர், தேன் ஆகியவைகளாம்.

உபயோகம்:—போர்மாந்த முதலிய மாந்தரோகங்கள் தீரும்-

உப்பு மாந்தம்.

இலக்ஷணம்;—வயிறுப்பி யிருத்தல், வயிற்றிரைச்சல், வயிறு கழிதல், தாகம், சுரம், பிதற்றல், வாந்தி, மூலையுண்ணுமை, மயக்கம் முதலியவைகளாம்.

சிகிச்சை:—துப்பைமேனியிலை விராகனெடை - ௧௦, கறியுப்பு விராகனெடை - ௨. இவ்விரண்டையுஞ்சேர்த்துக் கசக்கிப் பிழிந்து சாறெடுத்துக் குழந்தைக்கு வார்க்கவேண்டும். இவ்விதம் பிரதிதினமும் இரண்டு மூன்று தடவைகள் செய்யின் மேற்படி உப்புமாந்தம் முதலிய மாந்தரோகங்கள் தீரும்.

ஷை (வேறு)

மூக்காவேளை, மேற்றோல் சீவினசுக்கு, ஓமம் இவை வகை-௧-க்கு விராகனெடை-௧. இவற்றைச் சட்டியிலிட்டு வறுத்துக் கருக்கி அரையாழாக்கு ஜலத்தைவார்த்து மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் வடிகட்டி அதில் அரைக் குன்றிமணியெடை காயுருவி உப்பையும் அரைக்குன்றிமணியெடை ஆமையோட்டுப் பற்பத்தையும் மிஸ்ரமித்துப் பானஞ்செய்விக்கவேண்டும். இவ்விதம் காலைமாலை யிரண்டுவேளையுஞ் செய்துவந்தால் மேற்படி உப்பு மாந்த முதலிய பல மாந்தரோகங்கள் தீரும்.

சன்னி மாந்த ரோகம்.

இலக்ஷணம்:—மயக்கம், தலைபுரட்டல், கால்குளிர்ந்திருத்தல், நாவில் முள் தடித்திருத்தல், அதிகத்தாகம், அறிவுகெடுதல், வெறும்வாந்தி, ஏப்பம், வலிப்பு முதலியவைகளாம்.

சிகிச்சை:—மேற்றோல் சீவினசுக்கு, முருங்கைப்பட்டை, மாவிலிங்கைப்பட்டை, சிற்றரத்தை, வெற்றிலை, முசுறுமுட்டை இவை வகை-௧-க்கு விராகனெடை-௨. இவை யெல்லாவற்றையும் வைத்து நறுக்கிச் சாறுபிழிந்து அதில் அரைக்குன்றிமணியெடை கஸ்தூரியைச்சேர்த்துப் பானஞ்செய்விக்க வேண்டும். இவ்விதம் காலைமாலை யிரண்டுவேளையும் செய்துவரவும். பூண்டுத்தைலத்தைத் தேகத்தின்மீது பூசிவரவேண்டும். இவ்விதம் செய்தால் சன்னிமாந்தம் முதலிய பல மாந்தரோகம் தீரும்.

(இன்னும் வரும்.)

சுகாதார போதினி.

௫-ம் பிரிவு.

மூலரோகம்.

முன்தொடர்ச்சி (Vol-III-பக்கம்-(21)

கடுக்காய்த்தோற் சூரணம் விராகனெடை - ௬, காலையில் இதனை யுட்கொண்டு இதன்மேல் அரை ஆழாக்கு நீராகாரத்தைப் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் பிரதிகாலையிலும் சாப்பிட்டு வருவதினால் மூலரோகம் நிர்மூலமாகும்.

ஷை (வேறு.)

மைசாக்ஷிபலம்-௩, சரக்கொன்றைப்புளி பலம் - ௩, சூரத்துக் கடுக்காய்த்தோற் சூரணம் பலம்-௩, தா

ன்றிக்காய்த்தோற் சூரணம் பலம்-க, பிஞ்சுக் கடுக்காய்ச்சூரணம் பலம்-க, நெல்லிவற்றற்சூரணம் பலம்-க, அவ்திமூன் சூரணம் பலம்-க, உஸ்துகுதூஸ் சூரணம் பலம்-க, வெங்காயத்தாள்சாறு செல்லத்தக்கஅளவு, தேன்வீசை-க.

செய்முறை:—ஆரம்பத்தில் மைசாக்ஷியையும் சரக்கொன்றைப் புளியையும் கல்வத்திலிட்டு மேற்படி வெங்காயத்தாள் சாற்றைவிட்டு ஒருசாமமரைத்து மற்றச் சூரணங்களையுஞ் சேர்த்து மிஸ்ரமித்து வைத்துக்கொள்ளவும். தேனைக்காய்ச்சிச் சூடுகண்டபின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற மருந்தைச் சிறுகச்சிறுகப்போட்டு நன்றாய்க்கடைந்து மிஸ்ரமித்து இறக்கி ஆறினபின் பீங்கான் ஜாடியிற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-ரு. காலையில் மாத்திரம் ஒருவேளை சாப்பிடவேண்டும்.

உபயோகம்:—மலச்சிக்கல், மலபந்தம்ஆகியவைகள் நீங்கி மூலரோகம் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—தேகசுபாவத்திற்குத் தகுந்ததுபோல ஏற்படுத்திக் கொள்வதேயாம்.

ஷை (வேறு)

மைசாக்ஷி பலம்-உ, பாதுமையெண்ணெய் பலம்-உ, மஞ்சட்கடுக்காய்த்தோற் சூரணம் பலம்-௧௦, சூரத்துக் கடுக்காய்த்தோற் சூரணம் பலம்-௧௦, பிஞ்சுக் கடுக்காய்ச்சூரணம் பலம்-௧௦, நெல்விமுள்ளிச்சூரணம் பலம்-௧௦, சுத்திசெய்த சீமைச்சிவதைவேர்ச்சூரணம் விராகனெடை-கூ, ரூமிமஸ்தகிச் சூரணம் விராகனெடை-உஅ, நல்ல கெட்டித்தேன் பலம்-உ௧௦, வெங்காயத்தாள் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மைசாக்ஷியைக் கல்வத்திலிட்டு மேற்படி வெங்காயத்தாள் சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒரு சாமமரைத்து ரூமிமஸ்தகிச் சூரணத்தைத் தவிர மற்றைச் சூரணங்களில் வாதுமை நெய்யைவிட்டுப் புரட்டி நெய்ப்பசையுண்டாக்கிக் கல்வத்திலுள்ள மருந்துடன்சேர்த்து மிஸ்ரமித்து வைத்துக்கொள்ளவும். தேனை அடுப்பிலேற்றிச் சிறுதீயாயெரித்துச் சூடுகண்டவுடன் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் மருந்தைச் சிறுகச்சிறுகப்போட்டு நன்றாய்க்கடைந்து நன்றாய் ஆறினபின்பு ரூமிமஸ்தகிச்சூரணத்தைச் சேர்த்துப் பிசைந்து வைத்துக்கொள்ளவும். சூட்டுடன் ரூமிமஸ்தகியைச் சேர்த்தால் லேகியமானது அதிகம் கசந்துபோகும். ஆகையால்நன்றாய்க் குளிரஆறினபின் மேற்படி ரூமிமஸ்தகியைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-உ - ரு. அவசியமானால் காலைமாலை யிரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—மலபந்தம், மலக்கட்டு, மலச்சிக்கல், மலவறட்சி ஆகியவைகள் தீருவதுடன் மூலரோகமும் தீரும்.

பத்தியம்:—சமயோசிதம் போலவும், தேகசுபாவத்திற் கேற்றவிதமாகவும் ஏற்படுத்த வேண்டும்.

(இன்னும் வரும்.)

சுகாதார போதினி.

கூ-ம் பிரிவு.

இரசம்.

முன்தொடர்ச்சி (vol - III பக்கம். 22)

மகா சுராங்குசம்.

சுத்திசெய்த இரசம் விராகனெடை-௫, நாபிச் சூரணம் விராகனெடை - ௫, சுத்திசெய்த கெந்தகம் விராகனெடை-௫, ஊமத்தைவிதைச் சூரணம் விராகனெடை.உவ, மிளகுச்சூரணம் விராகனெடை - ச௧௦, எலுமிச்சம்பழச் சாறு அல்லது, இஞ்சிச்சாறுசெல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திற் சேர்த்தரைத்து நன்றாய்க்கறுத்தபின்பு மற்றவைகளையுஞ் சேர்த்தரைத்து எலுமிச்சம்பழச்சாற்றை அல்லது, இஞ்சிச்சாற்றைச்சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமமரைத்து ஒரு குன்றிமணியளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அனுபானம்:—இஞ்சிச்சாறு, தேன், மிளகுக்கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—வாதம், பித்தம், சிலேஷ்மம் ஆகிய மூவகைச் சுரங்களும் தீரும். பகல் சுரம், இராச்சுரம், ஒருநாள் முறைச்சுரம், இரண்டாமுறைச் சுரம், மூன்றாமுறைச்சுரம், நான்கா முறைச்சுரம் முதலிய முறைச்சுரங்களெல்லாம் தீரும். கைகால்பிடிப்பு, கீல்வாதசுரம், முதலியவைகளும் தீரும்.

பத்தியம்:—தேகசுபாவம், வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் ஏற்படுத்திக் கொள்ளவும்.

(இன்னும் வரும்.)

சுகாதார போதினி.

எ-ம் பிரிவு.

பற்பமுறைகள்.

முன்தொடர்ச்சி (Vol-III. பக்கம். 22.)

தாம்பிரசுத்தி (வேறு.)

கள்ளிப்பால் விராகனெடை-௬, எருக்கம்பால் விராகனெடை-௬, இந்துப்பு விராகனெடை-௧. இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு-௨-மணிநேரம் அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். தாம்பிரத் தகட்டைப் புளியிலைக் கனம் அடித்து முன் சித்தப்படுத்தின மருந்தை இருபக்கமும் பூசிக் கரிநெருப்பிற் பழுக்கக்காய்ச்சி நன்றாய்ப்பழுத்தபின்பு வெண்ணெச்சிச்சாற்றில் தோய்க்கவேண்டும். அந்தச் சாறானது இந்தத் தகடு ஆழ்ந்து கிடக்கும்படியாகத் தாராளமாக இருக்கவேண்டும். ஒரு தடவை உபயோகித்த சாறானது மறுதடவைக் குதவாது. அப்போதைக் கப்போது புதிய சாறுவிட்டுக் கொள்ளவேண்டும். முன்தோய்த்த தகடானது நன்றாய்க் குளிர ஆறினபின் முன் சித்தப்படுத்தின மருந்தை முன்போல் இருபுறமும் பூசி முன்போற் கரிநெருப்பிற் பழுக்கக் காய்ச்சி முன்போல் வெண்ணெச்சிச் சாற்றிற் சாய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பனிரெண்டு தடவைகள் செய்தெடுத்தால் தாம்பிரமானது பரிசுத்தமாகி யிருக்கும். இந்த வகைத் தாம்பிரத்தைப் பற்பம் செந்தூரம் ஆகியவைகள் செய்து உபயோகித்தால் அசுத்த தாம்பிரத்தின் துர்க்குணங்களாகியவாந்தி, அரோசகம், மயக்கம், திடுக்கம், அசதி முதலியவைகள் ஒன்றுமிராது. தேக ஆரோக்கியத்திற் கேதுவான குணங்களைத் தரும்.

இன்னும் வரும்.

கடிதங்கள்.

ஐயா!

அடியிற் சொல்லப்பட்ட அம்ல மண்டூரம் என்னும் சூரணமானது சற்று கடும்பத்தியமானதாயினும் என் சகோதர அபிமானிகளுக்கும் மற்றவர்களுக்கும் பொதுவாக லோகோப காரமாய் அப்பாகத்தை வெளிப்படுத்த முன் வந்தேன். இது அதிக சிறந்த குணமுள்ளதாகையால் ஒவ்வொருவரும் அனுபவத்தில் நிச்சயமாகத் தெரிந்து கொள்வார்கள். ஆகையால் இதனை நமது போதினி மூலம் வெளிப்படுத்தும்படி விரும்புகிறேன். இம்முறையானது வசன ரூபமாக எழுதப்பட்டிருக்கிறது. நாம் செய்கிற பாகமானது விசேஷம் குணமுடைய தல்லவென்பது எனது அபிப்பிராயம். அப்படிக்கிருந்தாலும் வேறு சரியான பாகம் தெரியாததால் இதையே உபயோகிக்கும்படி நேரிடுகிறது.

அம்முறையாவது:—மருங்கப்பள்ளம் பொன்கிட்டம் தேவையான அளவு. இதை நன்றாய்ச்சூரணித்து எட்டுப்பங்கு ஆவின்நீரில்போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து வேகவைத்துக் கொள்ளவேண்டும். பின்மேற்றோல் சீவினசுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, மேற்றோல் நீக்கின கோரைக்கிழங்கு, கிராம்பு, செவியம், கொடிவேலி வேர்ப்பட்டை, மரமஞ்சள், கண்டத்திப்பிலி, தேவதாரம் இவைகளைத் தனித்தனி யிடித்துவஸ்திரகாயஞ் செய்தசூரணம் சமனெடையாகச் சேர்த்தது, மொத்தம் சூரணம் மண்டூர சூரணத்திற்குச் சமனெடை யிருக்கவேண்டும். இந்தச் சூரணத்தை முன் மண்டூர சூரணத்துடன் கலந்து நன்றாய் அரைத்து விராகனெடை-௨. ௩. சாப்பிடலாம். சாப்பிட்டவுடன் பசுவின்மோர் விட்டு விழுங்கவேண்டும்.

உபயோகம்:—எல்லாவிதமான பாண்டு, சோகைகள், உதரரோகங்கள், காமாலை, ஊருஸ்தம்ப வாதம், முதலானவை தீரும். இதில் பாண்டு, சோகை, அசீர்ணம், பித்தவாயு முதலானவைகளுக்குக் கொடுத்து நிச்சயமான குணங் கண்டிருக்கிறது.

பத்தியம்:—உப்பு, புளி முதலிய ஒன்றும் சேர்க்கக் கூடாது பசுவின்மோரும் சாதமும் தான் சாப்பிடவேண்டும். தாகத்துக்கும் மோரே சாப்பிடவேண்டும், ஏழுநாட்களுக்குள் எவ்விதமான பாண்டுவீக்கமும் நீங்கிவிடும்.

குறிப்பு.

மோரைக்காட்டிலும் பசுவின்பால் விசேஷகுணமுள்ளதென்று நினைக்கின்றேன். இந்த விஷயத்திலும் மண்டூரத்தைப் பக்குவஞ்செய்யும் விஷயத்திலும், மற்ற விஷயங்களிலும் பத்திராதிபரவர்கள் அபிப்பிராயம் தேவை.

சந்தா நெ. 9.

விளம்பரம்.

இலக்க சௌமிய சாகரம் தெளிபொருள்
விளக்கவுரை முதற்காண்டம்,
ஷை இரண்டாங் காண்டம்.

மேற்படி இரண்டு காண்டங்களும் அச்சாகி விற்பனைக்குச் சித்தமா யிருக்கின்றன. இந்த (இலக்க சௌமிய சாகர) மென்னும் அரிய நூலானது அகஸ்திய மகா முனிவராற் செய்யப்பட்ட தென்பதும் மகா சிறப்புற்ற தென்பதும் உலகறிந்தவிஷயம். இந்நூல் இதுவரையில் உரையுடன் வெளிப்படவில்லையென்பது நிச்சயம். இதில் வாதம், வைத்தியம், மாந்திரீகம், ஞானமுதலிய விஷயங்கள் மிகவுந் தெளிவாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. இதிலுள்ள பாக்களெல்லாம் சித்திரகவிக் கிரமமாகவும் ஆழ்ந்த பொருட்களை யகத்துள்ளடக்கின வைகளாவும், பிரித்தாலோ உன்னத முறைப்பொருந்த மாகவும், பொருள்களை இலகுவிற் றெரிந்துகொள்ளும் விதமாயும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இது பத்துக் காண்டங்களுள்ளது. இதிலுள்ள முறைகளெல்லாம் நிச்சயமாகக் கைகூடத் தக்கவைகளும், சந்தேகமற்ற வைகளும், பல ஆச்சரியமான வேலைகளைச்செய்யத் தக்வைகளுமாம். வாதம், வைத்தியம், மாந்திரீகம், ஞான முதலியவைகளை விரும்பும் ஒவ்வொருவருக்கும் இந்த நூல் ஒன்றே போதுமானது. இந்த நூலின் பெருமை இதனை வாங்கிப்பார்த்து இதிலுள்ள முறைகளைச்செய்து கையாண்டால்மட்டுந் தெரியுமேதவிர மற்றவர்களுக்குக் கிஞ்சித்தும் புலப்படாது. இதனைப் படிக்கப் படிக்க அளவற்ற ஆச்சரியத்தையும், ஊக்கத்தையும் அதிகரிக்கச் செய்து வருமே தவிர ஒரு சிறிதும் வெறுப்பிற் கிடந்தராது.

இது மற்ற சித்தர் நூற்களைப்போல எடுத்த தெல்லாமெண்ணிலாச் சந்தேகமாயும், பார்ப்பவைபெல்லாம் பரம ரகசியமாயும், ஓரிடத்திலெடுத்த விஷயம் மற்றோரிடத்தில் முடிவு பெற்றதாயும், ஒரு நூலிற் சொல்லிய முறைக்கு வேறோர் நூலில் மர்மங்கண்டு பிடிக்கவேண்டிய தாயுமுள்ள பலவித மயக்கங்களுக்கு ஏதுவானதல்ல இதன் பாக்களின் அருத்தங்களை மட்டும் உணர்ந்துகொண்டால் மற்ற எவ்விஷயங்களிலும் எத்தகைய சந்தேகங்களும் ஏற்படாது. இதிற் சொல்லப்பட்ட முறைகள் சம்மந்தமான ஒவ்வொரு சரக்குகளின் பிறப்பிடம், ரூபம், இலக்ஷணம், குணம் பெயர் முதலியவைகள் அநேகவித ஹேதுக்களைக் கொண்டு தெளிவுபடுத்தப் பட்டிருக்கின்றன. இவ்விதமே ஒவ்வொரு விஷயமும் பலவிதத்தாலும் எவ்வித சந்தேகமும் வராமற் செவ்வனே விளக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் இதிலுள்ள முறைகளைமட்டும் தெரிந்து செய்துகொண்டால் உலகத்தில் எவ்விஷயத்தையும் சாதிக்கலாமென்ற நம்பிக்கை யிருப்பதினாலேயே அநேக முறைகளைச்சொல்லி மனதை அங்குமிங்கு மலைபச்செய்யாமல் இதன் பத்துக் காண்டங்களிலும் முக்கியமான சில முறைகளையே சொல்லியிருக்கின்றார். இன்னும் இதில் இரசவாத விஷயத்தை மற்ற நூற்களில் ஆகாத காரியத்தை ஆவதுபோற்காட்டி அதிலும் சந்தேகத்தைமூட்டியிருப்பதுபோலல்லாதுஒவ்வொருவிஷயமும் மெய்யாகவும்,சந்தேகத்திற்கிடமின்றியும் அந்தந்தந்த அளவின் கிரமப்படியும் வெகு நுட்பமாகச் சொல்லப்பட் டிருக்கின்றது. இதன் அருமை பெருமைக ளெல்லாம் இந்நூலை ஒருதடவை பார்த்தவுடன் அனுபவசாலிகளுக்கு நன்கு விளங்கும்.

இன்னும் இது வைத்தியர்களைத் தவிர மற்றய தமிழ்கற்கு மாணுக்கர்களுக்கும் பாடங்கேட்கவேண்டிய இன்றியமையாத ஓர் சிறந்த நூலாகும்.

இரசவாதம் வைத்திய முதலியவைகளை விரும்புகின்றவர்களுக்கு இந்த முறைகளைமட்டு முடித்துக்கொண்டாலேபோதுமானதுஇக்காண்டங்களுக்கு அரியபாக்களையெடுத்துக்கொண்டு முறைபிசகாதுதெளிவான உரைஎழுதி யிருப்பதோயொவருமெளிதி லுணர்ந்துகொள்ளும் விதமாக அந்தந்தக்காண்டங்களின் கடோசியில் அவைகளி லடங்கியுள்ள முறைகளை வசனரூபமாகவு மெழுதப்பட் டிருக்கின்றது. இவைகள் ஒவ்வொருவர் கையிலும் அவசிய மிருக்கத் தக்கதே. தமிழ் விரும்புங் கனவான்களுக்கும் அவசியமானதே. லோகோபகாரத்தைக் கருதியே இவைகளுக்கு மிகவுங் குறைந்தவிலை யேற்படுத்தப் பட்டிருக்கின்றன.

மேற்படி - 2 - காண்டங்களும் ஒன்றாக பைண்டு செய்யப்பட் டிருக்கின்ற பிரதி-1-க்கு கைவிலை ரூபா 1 - 0 - 0, வி - பி - ரூபா 1 - 3 - 0.

☞ ஹக்கீம் - பா -முகம்மது அப்துல்லா.

சந்தா தாரர்களின் பெயர்.

கீழ்க்கண்ட கனதனவான்கள் நமது போதினியின் 1907 ௵ சந்தாவை நம்மீது பேரன்புடன் முன் பணமாக அனுப்பினதற்காக நாம் மனப் பூர்வமான வந்தனத்துடன் பெற்றுக் கொண்டோம்.

கனம். கிருஷ்ணசாமி ராஜா
வேட்டவளம். 2 ,, ,,

கனம். கிருஷ்ண சாமி நாயுடு
நாகப்பட்டணம். 2 ,, ,,

கனம். மாதவாச்சாரியார்
சிறேமல்குடி. 2 ,, ,,

கனம். P. விஸ்வாஸ், காடிகிஸ்ட்
சிலுவார் பட்டி. 2 ,, ,,

கனம். K. சாயபு மரைக்காயர்
நிர்வி. 2 ,, ,,

கனம். R. முத்து நரசிம்மலு நாயுடு
மேலப்புதுப் பாக்கம். 2 ,, ,,

கனம். S. K. கந்தசாமி கவுண்டர்
ராமநாராயண புரம், 2 ,, ,,

கனம். முகம்மது காசீம் சாயபு
குண்ணத்தூர். 2 ,, ,,

கனம். K. தர்மராஜ அய்யர்
பார்வதி புரம். 2 ,, ,,

கனம். V. சுப்பய்ய காரு
கும்பகோணம். 2 ,, ,,

கனம். M. நாராயணசாமி அய்யர் B. A. B. L.
திருவல்லிக் கேணி. 2 ,, ,,

கனம். M. சுப்பிரமணிய அய்யர்
கோட்டப் பாடி. 2 ,, ,,

கனம். K. குப்புசாமி அய்யர் B A. B. L.
திருவல்லிக் கேணி. 2 ,, ,,

கனம் ஞானசேகர முதலியார்
மதருஸ். 1 ,, ,,

கனம். A. L. M. முகம்மத் முகைதீன் அவர்கள்
கொளும்பு. 2 ,, ,,

கனம். J. S. பிச்சை முத்து
காரைக்கால். 2 ,, ,,

கனம். T. ஆறுமுக முதலியார்
திருவடீஸ்வரன் பேட்டை. 1 ,, ,,

கனம். E. அண்ணுசாமி முதலியார்
நாமக்கல். 2 ,, ,,

கனம். C. மாதவராவ்
தும்கூர். 2 ,, ,,

கனம். M. ரத்தினவேலு முதலியார்
மதருஸ். 2 ,, ,,

கனம். E. ராகவாசாரியர்
நெல்லூர். 2 ,, ,,

கனம். M, கந்தசாமி பிள்ளை
பழனி. 2 ,, ,,

கனம். கைலாஸநாத சர்மா
எடையாத்தாங்குடி. 2 ,, ,,

கனம். N. S. சுந்தரேச அய்யர்
உதயமார்த் தாண்டபுரம். 2 ,, ,,

கனம். N. V. நாராயணய்யர்
டங்வ்வி. 2 ,, ,,

கனம். எத்திராஜுலு நாயுடு
சிவகிரி. 2 ,, ,,

கனம். V. S. மஹாதேவ அய்யர்
விக்கிர பாண்டியன். 2 ,, ,,

கனம். O. C. P. S. E. பக்கீர்முகைய்த்
தீன் ராவுத்தர், மதுரை. 2 ,, ,,

கனம். a. R. சுப்பிரமணிய அய்யர்
தாழக்குடி. 2 ,, ,,

கனம். M. சங்கர அய்யர்
ராதாபுரம். 2 ,, ,,

கனம். a. இரத்தின வேலு செட்டியார்
மதருஸ். 2 ,, ,,

கனம். M. S. வெங்கட ராமய்யர்
மேலமங்கலம். 2 ,, ,,

கனம். S. முத்து குமாரஸ்வாமி பிள்ளை
கூத்துபாட்டர் தோப்பு. 2 ,, ,,

கனம். M. S. V. உலகநாதப் பிள்ளை
தேவகோட்டை. 2 ,, ,,

கனம். a. J. சுப்பிரமணிய ராஜு
பெருமாளகரம். 2 ,, ,,

கனம். S. கிருஷ்ண அய்யர்
பெருமாளகரம். 2 ,, ,,

கனம். R. N. சிவசூரிய பிள்ளை
ராதாபுரம். 2 ,, ,

கனம். தே. வே. சாமியார் என்கிற வாலாம்
பிகைதாச சுவாமிகள், பேரளம் 2 ,, ,,

இப்போதினியானது முன்பணங் கொடுத்தவர்களுக் கன்றி மற்றவர்களுக் கனுப்பப்படாது எனகண்டிப்பான விதி ஏற்பட் டிருப்பதால் பாரபக்ஷமின்றி ஒருவருக்கு முன்பண மில்லாமல் அனுப்புவது மேற்படி ஏற்பாட்டிற்கு விரோதமாகும். ஆகையால், சிலகனவான்களின் விருப்பப்படி பத்திரிகை யனுப்பப்படவில்லை. ஆகையால் அந்தக் கனவான்கள் இப்போதினியைப் பெற்றுக்கொள்ள இஷ்ட மிருந்தால், முன்பண மனுப்பத் தயவு செய்வார்களெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.